உ
சிவமயம்
ஸ்ரீ [illegible] து

# ஔவையார்
அருளிச் செய்த

# விநாயகர் அகவல்

★

ஸ்ரீ காசி விநாயகர்
மகா கும்பாபிஷேக
நினைவு மலர்
3—7—1957

★

ஸ்ரீ காசிமடம் :: திருப்பனந்தாள்

# திருமுறை வெளியீடுகள்

| | | ரூ. | ந.பை |
|---|---|---|---|
| 1 | விநாயகர் திருமுறை ... ... | 0 | 6 |
| 2 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் ... ... | 6 | 0 |
| 3 | திருஞானசம்பந்தர் தேவாரம் ... | 2 | 50 |
| 4 | திருநாவுக்கரசர் தேவாரம் ... | 2 | 25 |
| 5 | சுந்தரர் தேவாரம் ... ... | 1 | 0 |
| 6 | திருவாசகம் ... ... ... | 0 | 37 |
| 7 | திருக்கோவையார்-பேராசிரியர் உரை | 2 | 0 |
| 8 | ஒன்பதாம் திருமுறை-திருவிசைப்பா, திருப்பல்லாண்டு .. ... ... | 0 | 56 |
| 9 | திருமந்திரம் ... ... | 1 | 50 |
| 10 | பதினோராந் திருமுறை ... ... | 1 | 25 |
| 11 | அம்மையார்-அற்புதத் திருவந்தாதி ... | 0 | 25 |
| 12 | திருக்கைலாய ஞானவுலா ... ... | 0 | 50 |
| 13 | பெரிய புராணம் ... ... | 2 | 50 |
| 14 | அகத்தியர் தேவாரத் திரட்டு ... | 0 | 37 |
| 15 | திருவிளையாடற் புராணம் ... ... | 3 | 0 |
| 16 | தாயுமான சுவாமிகள் பாடல் ... | 1 | 25 |
| 17 | கந்த புராணச் சுருக்கம் ... ... | 1 | 75 |
| 18 | கந்த புராணம்—முதல் மூன்று காண்டங்கள் ஆராய்ச்சிக் குறிப்புடன் ... | 2 | 75 |
| 19 | ஷை யுத்தகாண்டம் தேவகாண்டங்கள் ஆராய்ச்சிக் குறிப்புடன் ... ... | 1 | 75 |
| 20 | ஷை தக்ஷகாண்டம் குறிப்புரை ... ஆராய்ச்சிக் குறிப்புடன் ... ... | 1 | 50 |

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து இலவச வெளியீடு

உ
சிவசிவ
செந்திலாண்டவன் துணை

ஔவையார்

அருளிச் செய்த

# விநாயகர் அகவல்

★

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி
அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்
அவர்களுடைய திருவுளப்பாங்கின்படி

★

ஸ்ரீ காசிமடம் இளவரசு
ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
அவர்களால் வெளியிடப்பெற்றது

ஸ்ரீ காசிமடம் 1957 திருப்பனந்தாள்

உ

சிவசிவ

# அருள் பெறும் வழி

வேழ முகத்து விநாயகனைத்தொழ
வாழ்வு மிகுத்து வரும்.

கருணை வள்ளல் கணபதியைத்தொழ
அருமைப் பொருள்கள் அனைத்தும் வருமே.

வெள்ளைக் கொம்பன் விநாயகனைத்தொழ
துள்ளி யோடும் தொடரும் வினைகளே.

— ஔவையார்

மலையான் மகள்பெற்ற வாரணத்தை வாழ்த்த
எலையாம்வீடு ஏனையமூன் றும்.

— இறைவனூற்பயன்

# முன்னுரை

*எப்போ தகத்து நினைவார்க்கு இடரில்லை*
*கைப்போ தகத்தின் கழல்.*

— நால்வர் நான்மணி மாலை

'சைவ சமயமே சமயம்' எனப் புகழும் சைவ மரபிலே வந்த ஒவ்வொருவரும் இறை வழிபாட்டில் நிற்றலே மக்கட் பிறவி எடுத்ததன் பயனாகும். இறை பணியில் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி உருகி நின்று வழிபடுவதற்கு ஆன்றோர்கள் இயற்றிய பாடல்கள் பல உள. அவற்றுள் ஔவையார் அருளிச்செய்த **விநாயகர் அகவலும்** ஒன்றாகும். இது பக்திச் சுவையையூட்டி மனத்தை ஒருவழிப்படுத்த வல்லது; எளிய நடையில் அமைந்து யாவராலும் படித்துப் பயன்பெறத்தக்கது; இத்தகைய விநாயகர் அகவல் **ஸ்ரீ காசி விநாயகர் மகா கும்பாபிஷேக நினைவு மலராக** ஏவிளம்பி ஆண்டு ஆனித் திங்கள் 19-ஆம் நாளாகிய இந்நன்னாளில் **திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் இலவச வெளியீடாக** வெளி வருகின்றது.

**ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்** அவர்கள் இதுவரை சைவ சமய வளர்ச்சிக்கும் ஏனைப் பொது நலன்களுக்கும் சுமார் 42 - இலட்சம் ரூபாய்கட்குமேல் அருட்கொடை வழங்கி, மேலும் நாளும் பல அறங்களையும் ஆற்றி வருகின்றார்கள் என்பது தமிழுலகம் நன்கறியும். ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீகாசிமடத்துக்கு எதிரில் உள்ள திருக்குளத்தின் நடுவில் நீராழி மேடைமேல் புதிதாகக் கேதாரக் கோபுரம்போல் கட்டப் பெற்ற ஸ்ரீ காசி விநாயகர் ஆலயத்தில் வெண் பளிங்கு விநாயகரைப் பிரதிஷ்டை செய்து மக்கள் வழி பட்டுப் பயன்பெறப் புரிந்த அருட்செயல் என்றும் போற்றற்குரிய தொன்றும்.

இச்சிறு நூல் நன் முறையில் அமைய ஆகும் பணி களைப்புரிந்த திருப்பனந்தாள் **சிவநெறிச் செல்வர் திரு. கே. எம். வேங்கடராமையா, M.A., B.O.L.** அவர்களுக்கு எனது நன்றி என்றும் உரியதாகுக.

இச் சிறு நூலை வெளியிடுதற்குத் திருவுளம்பாலித் தருளிய **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள்** அவர்களுக்கும் **ஸ்ரீமத் இளவரசு சுவாமிகள்** அவர்களுக்கும் சைவ உலகம் நன்றிபாராட்டும் கடப்பாடுடையதாகும். இந் நூலைச் சைவ அன்பர்கள் நாடோறும் பாராயணம்செய்து விநாயகரின் திருவருளைப்பெற வேண்டுகின்றேன்.

திருச்சி
3—7—57

இங்ஙனம்,
**தி. பட்டுச்சாமி ஓதுவார்**

உ

சிவசிவ

# விநாயகர்

# திருவுருவத் தத்துவம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

— திருமந்திரம்

**விநாயகர் பெருமை :**

விநாயகர், ஞான உருவமே திருமேனியாகக் கொண்டவர் ; தமக்குத் தலைவன் வேறு ஒருவரும் இல்லாதவர் : சுதந்தரம் உடையவர் : துன்பம் அணுகாமல் பாதுகாப்பவர் : மெய்யன்பரின் உள்ளத்தில் என்றும் கட்டுண்டு நிற்பவர். ஒன்றாகியும் பலவாகியும் அருவாகியும் உருவாகியும் எங்கும் நீக்கமற நின்ற சுயம் சோதி வடிவமாகிய இவர் கணபதி என்ற திருநாமம் தாங்கி உலகமெலாம் உய்யும்படி எழுந்தருளிய மூர்த்தி ஆவர்.

ஒன்றதாய்ப்பல வாய்அரு வாய்உரு வாகி
நின்று எலாவுலகத்தினும் நீக்கமி லாத
துன்று சோதியே கணபதி எனச்சொலும் நாமம்
நன்று தாங்கியது : அறிமதி நாமெலாம் உய்ய.

— விநாயக புராணம்

**திருவுருவ அமைப்பு :**

மாகத முனிவருக்கும் விபுதை என்னும் அசுரப் பெண்ணிற்கும் தோன்றிய **கயமுகாசுரன்** என்பவன் சிவபெருமானிடம் தேவர்களாலும் பூதங்களாலும் மனிதர்களாலும் மிருகங்களாலும் இறவா வரம் பெற்றிருந்தான். அவன் தன் வர பலத்தால் தேவர்கள் முதலியோரைத் துன்புறுத்தினான். இந்திரன் பரம்பொருளாகிய சிவபெருமானிடம் முறையிட்டுக்கொண்டான். அப் பரம் பொருளின் சக்தியே, கயமுகனை அழித்தற் பொருட்டு யானைத் தலையும். தேவ உடலும் பூதக்கால்களும் ஐந்து கரங்களுங் கொண்ட விநாயக மூர்த்தியாக எழுந்தருளியதாகும்.

விநாயகக் கடவுளின் வலது திருவடி ஞான சக்தி என்றும், இடது திருவடி கிரியா சக்தி என்றும் கூறப் பெறும்- இத் திருவடித் தாமரைகள் உயிர்களின் வினையைப் போக்கி இன்பம் பெருக வைப்பன.

உலகம் யாவும் தம்முள் அடங்கி இருப்பதைக்காட்டும் பெருவயிற்றின் திருவடிவமே கணபதியின் பேழை வயிறும்.

விநாயகரின் ஐந்து திருக் கரங்களில் மேலுள்ள வலக் கரம் அங்குசத்தையும் இடக்கரம் பாசத்தையும், கீழுள்ள வலக் கரம் ஒடிந்த ஒற்றைக் கொம்பையும், இடக் கரம் மோதகத்தையும் தாங்கியுள்ளன. துதிக்கை கீழ்நோக்கித் தொங்கும் நிலையில் உள்ளது. பாசம் ஏந்திய கை படைப்புத் தொழிலையும், ஒற்றைக் கொம்பு உள்ள கை காத்தல் தொழிலையும். அங்குசம் தாங்கியகை அழித்தல்தொழிலையும்,

துதிக்கை மறைத்தல் தொழிலையும், மோதகம் ஏந்திய இடக்கை அருள் புரிதலையும் நினைப்பூட்டும். ஆகவே ஐந்து திருக்கரங்களும் ஐந்து தொழிலை அறிவிக்கின்றன.

விநாயகரின் திருச்செவிகள் உயிர்களுக்கு மலவாதனையின் வெப்பம் தாக்காமல் பாதுகாக்கும் தன்மையன.

விநாயகரின் வலக்கண் சூரியனும், இடக்கண் சந்திரனும், நெற்றிக்கண் அக்கினியும் ஆகும். இம்முக்கண்களும் உயிர்களுக்கு இதம் செய்வனவாம்.

விநாயகருக்கு முகம் மாத்திரம் யானை உருவம் ஆதலால், இரண்டு மதமே உண்டு. மும்மதம் என்றது உபசார வழக்கு. விநாயகரின் வலக் கன்னத்தில் அறக் கருணை மதமும், இடக் கன்னத்தில் மறக் கருணை மதமும் பொழிகின்றது. "கருணை என்னும் வெள்ள மதம் பொழி சித்தி வேழத்தை நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்" என்பது திருவிளையாடற் புராணம்.

**வழிபாட்டின் பயன் :**

"கூடும் அன்பினிற் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" என்ற திருவாக்கின்படி விநாயகர் வழிபாடொன்றே நமக்குரியது. நமது பக்குவமறிந்து வேண்டுவனவற்றை நாம் கேளாமலே அவர் தரவல்லவர். நாடோறும் விநாயகர் பூசை செய்து வழிபடுவோரிடத்திலே இலக்குமி என்றும் நீங்காதிருப்பாள்.

"நல்லார் பழிப்பில்......விநாயகனே என்று மெய்ம்மகிழ வல்லார் மனத்தன்றி மாட்டாள் இருக்க மலர்த்திருவே."

— மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை

உயிர்களைத் துன்புறுத்தும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் விநாயகரே போக்குவார். விநாயகர் பூசை செய்யும் அன்பர்களை ஆணவமலம் துன்புறுத்த எண்ணுவது, எறும்பானது நெருப்பைக் கடித்துத் துன்புறுத்த நினைப்பது போலாகும்.

மருப்பைஒரு கைக்கொண்டு நாரையூர் மன்னும்
பொருப்பைஅடி போற்றத் துணிந்தால்—நெருப்பை
அருந்தஎண்ணு கின்ற எறும்(பு) அன்றே அவரை
வருந்தஎண்ணு கின்ற மலம்.

— விநாயகர் திருவிரட்டை மணிமாலை

ஆகையால், விநாயக வழிபாடு ஒன்றே சகல சித்திகளையும், அஷ்ட ஐசுவரியங்களையும் அளித்து அழியா இன்பத்தையும் தர வல்லது.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

— மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை

உ

சிவசிவ

# விநாயகர் துதி

---

உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந்
 தறிநிறுவி உறுதி யாகத்
தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி
 இடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
 களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
 நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம்.

— திருவிளையாடற் புராணம்

அகரமென அறிவாகி உலக மெங்கும்
 அமர்ந்துஅகர உகரமக ரங்கள் தம்மால்
பகருமொரு முதலாகி வேறு மாகிப்
 பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில்பொருள் நான்கினையும் இடர்தீர்ந்துஎய்தப்
 போற்றுநருக்கு அறக்கருணை புரிந்து அல்லார்க்கு
நிகரின்மறக் கருணைபுரிந்து ஆண்டு கொள்ளும்
 நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.

— விநாயக புராணம்



சித்தி விநாயகன் சீரடி போற்றி!

சிவசிவ

செந்திலாண்டவன் துணை

## சித்தி விநாயகர் துதி

சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொருள் நல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே.

— திருவிளையாடற் புராணம்

## ஒளவையார்

அருளிச் செய்த

## விநாயகர் அகவல்

நிலைமண்டில ஆசிரியப்பா

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாவிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
பொற்புற விளங்கும் பொருளே! கயிலை
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!

இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்

தெவிட்டா ஞானத் தெளிவையுங் காட்டி

ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்துஇருள் கடிந்து

தலமொரு நான்குந் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறு தாரத்து அங்குச நிலையும்

பேறு நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனை கபாடமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதா ரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்

உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கு அருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக் கொன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்திஎன் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி

அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலைஅறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக ! விரைகழல் சரணே.

---

## சிவநாமம்

சிவசிவ என்கிலர் தீவினை யாளர் ;
சிவசிவ என்றிடத் தீவினை மாளும் ;
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர் ;
சிவசிவ என்னச் சிவகதி தானே.

— திருமந்திரம்

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க ;
மலிவளஞ் சுரக்க ; மன்னன்
கோன்முறை அரசு செய்க ;
குறைவிலாது உயிர்கள் வாழ்க ;
நான்மறை அறங்கள் ஓங்க ;
நற்றவம் வேள்வி மல்க ;
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக ; உலக மெல்லாம்.

— கந்தபுராணம்

சிவசிவ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்

அவர்கள் நிறுவிய தருமங்கள்.

| தொடர் எண் | தரும விவரம் | | மூலதனம் ரூபாய் |
|---|---|---|---|
| 1. | திருமுறை வளர்ச்சிக்காக | 27 தருமங்கள் | 4,06,000 |
| 2, | கல்வி அபி விருத்திக்காக | 48 ௸ | 6,04,200 |
| 3. | சைவசித்தாந்தம் பரப்ப | 7 ௸ | 1,56,000 |
| 4. | அன்னதானம்செய்ய | 98 ௸ | 23,69,000 |
| 5. | வைத்தியம் செய்ய | 5 ௸ | 1,22,500 |
| 6, | பொது தருமம்-ஸ்நான கட்டம், அகதி நன்கொடை தண்ணீர்ப் பந்தர் முதலியன | 54 தருமங்கள் | 5,05,745 |
| | ஆகத் தருமங்கள் 239-க்கு | | 41,63,455 |

---

தியோடர் பிரஸ், திருச்சிராப்பள்ளி.

| | | ரூ | நயா பை |
|---|---|---|---|
| 21 | கந்தர் அலங்காரம் குறிப்புரை ... | 0 | 25 |
| 22 | கந்தர் அனுபூதி ௸ ... | 0 | 18 |
| 23 | கந்தர் கலிவெண்பா-உரை ஓதுவார்... | 0 | 37 |
| 24 | நீதிநெறி விளக்கம் — ஆங்கிலம், ஹிந்தி, | 0 | 50 |
| 25 | சகலகலா வல்லி மாலை - தமிழ் உரையும் ஆங்கிலமும், ஹிந்தியும் கூடியது | 0 | 6 |
| 26 | திருக்குறள் - அறத்துப்பால் - ஹிந்தி மொழிபெயர்ப்பு ... ... | 1 | 50 |
| 27 | ௸ பொருட்பால் ௸ ௸ ... | 2 | 50 |
| 28 | காமத்துப்பால் ௸ ௸ ... | 1 | 0 |
| | ௸ மூன்று புத்தகமும் சேர்த்து ... | 4 | 0 |
| 29 | பெரிய புராணம் உரைநடை ... | 2 | 0 |
| 30 | திருவிளையாடற் புராணம்-உரை நடை | 2 | 25 |
| 31 | குமரகுருபர சுவாமிகள் சரித்திரப் பட விளக்கம் ... ... ... | 0 | 50 |
| 32 | அபிராமி பட்டர் பிரபந்தம் ... | 0 | 81 |
| 33 | திருக்கயிலைத் திருமுறை ... ... | 0 | 37 |

மேற்கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள் :—

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கல்விக்கோயில்
ஸ்ரீவைகுண்டம்
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்,
"இராமராஜு விலாஸ்"
53, பிள்ளையார் கோவில் தெரு, திருவட்டீசுவரன்
திருவல்லிக்கேணி, சென்னை [பேட்டை.
3. பன்னிரு திருமுறை மன்றம், தெற்கு ஆடி வீதி,
மதுரை.

குறிப்பு:—௸ விற்பனைத் தொகை "குமரகுருபரன்" பத்திரிகையைச் சாரும்.

உ

# "குமர குருபரன்"

(தமிழ்த் திங்கள் வெளியீடு)

ஸ்ரீவைகுண்டம்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடாலயத்தி
லிருந்து மாதந்தோறும் வெளிவருகிறது

★

இது
சைவசித்தாந்தம், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்
பிரபந்தம், பன்னிரு திருமுறை ஆராய்ச்சி,
இலக்கியம், பிறமொழிகள், கலாசாரம்
சம்பந்தமான கட்டுரைகள் கொண்டது

★

நிர்வாக ஆசிரியர்:
**T. M. குமரகுருபரன் பிள்ளை, B.A., B.L.,**
(நிரந்தரத் தலைவர் குமரகுருபரன் சங்கம்)
மானேஜிங்டிரஸ்டி **ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடம்**
**ஸ்ரீவைகுண்டம்**

**வருட சந்தா ரூ. 1—8—0 தனிப்பிரதி 0—2—0**